கனி கொடாதோரின் கதி

நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்துகொண்டேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். யோவான் 15:16

தேவனது பிரதான நோக்கத்தை இவ் வசனத்தில் நாம் காணமுடியும். தேவனே நம்மைத் தெரிந்துகொண்டார்; நாம் அவரைத் தேடிச் செல்லவில்லை என்கிற சத்தியத்தையும் இந்த வசனத்தின் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம். இவ்வுலகத்தில் காணப்படும் சந்நியாசிகள் பல விதங்களில் தங்களது சரீரத்தைத் துக்கத்திற்கு உட்படுத்திக்கொண்டு கடவுளைத் தேட முயற்சிக்கின்றனர்; அதற்கென்று பலவிதமான வழிமுறைகளையும் அவர்கள் கையாளுகின்றனர். ஆனால், தேவனைத் தேட நாம் இவர்களைப்போல இப்படி வேதனைப்படவேண்டிய அவசியமில்லை. தேவனே நம்மைத் தேடி பூமிக்கு வந்திருக்கிறார். “நீ என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்” என்றே தேவன் நம்மைப் பார்த்து கூறுகின்றார். நாம் பணக்காரர்களல்ல, பலவான்களல்ல; எனினும் தேவன் நம்மை ஏன் தெரிந்துகொண்டார்? தெரிந்துகொண்டதோடு மாத்திரமல்லாமல், நான் உங்களை ஏற்படுத்தினேன் என்றும் நம்மைப் பார்த்து கூறுகின்றார். தேவன் நம்மைத் தெரிந்துகொண்டதின் பிரதான நோக்கம், நாம் அவருக்காக இவ்வுலகில் கனிகொடுக்கவேண்டும் என்பதற்காகவே. நாம் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயிருந்தும் கனிகொடாததோர் வாழ்க்கையை இவ்வுலகில் வாழுவோமென்றால் என்ன ஆகும்? தேவனுக்கென்று நாம் கனிகொடுக்கவில்லையென்றால் நமக்கு என்ன வைக்கப்பட்டிருக்கின்றது? என்பதையும் வேதத்தின் அடிப்படையில் நாம் ஆராய்ந்துபார்ப்போமென்றால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அது அடித்தளமாகவும், அஸ்திபாரமாகவும் மாறும்.

வேலியற்றதாகும் மரம்

இப்பொழுது நான் என் நேசரிடத்தில் அவருடைய திராட்சத்தோட்டத்தைக் குறித்து என் நேசருக்கேற்ற ஒரு பாட்டைப் பாடுவேன், என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத்தோட்டம் உண்டு. அவர் அதை வேலியடைத்து, அதிலுள்ள கற்களைப் பொறுக்கி, அதிலே நற்குல திராட்சச்செடிகளை நட்டு, அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக்கட்டி, அதில் ஆலையையும் உண்டுபண்ணி, அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று காத்திருந்தார், அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது. எருசலேமின் குடிகளே, யூதாவின் மனுஷரே, எனக்கும் என் திராட்சத்தோட்டத்துக்கும் நியாயந்தீருங்கள். நான் என் திராட்சத்தோட்டத்திற்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச் செய்யலாம்? அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று நான் காத்திருக்க, அது கசப்பான பழங்களைத் தந்ததென்ன? இப்போதும் நான் என் திராட்சத்தோட்டத்துக்குச் செய்வதை உங்களுக்கு அறிவிப்பேன், அதின்வேலியை எடுத்துப்போடுவேன், அது மேய்ந்துபோடப்படும், அதின் அடைப்பைத் தகர்ப்பேன், அது மிதியுண்டுபோம். அதைப்

பாழாக்கிவிடுவேன், அதின் கிளை நறுக்கப்படாமலும், களைகொத்தி எடுக்கப்படாமலும் போவதினால், முட்செடியும் நெரிஞ்சிலும் முளைக்கும், அதின்மேல் மழை பெய்யாதபடிக்கு மேகங்களுக்கும் கட்டளையிடுவேன் என்கிறார். ஏசாயா 5:1-6

இயேசுவை நாம் நமது வாழ்வில் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, தேவன் நம்மைச் சுற்றிலும் வேலி அடைத்து நம்மைப் பாதுகாக்கின்றார். தேவன் நம்மைச் சூழ வேலி அடைத்திருப்பது சாத்தானுக்குத் தெரியும். இதனை நாம் யோபுவின் புத்தகத்தில் தெளிவாகக் காணமுடியும். சங்கீத புத்தகத்தில் 'இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை' என்று எழுதப்பட்டிருக்கின்றதே. தேவன் ஏன் நம்மை இத்தனையாய் விழித்து பாதுகாக்கவேண்டும்; நாம் அவருக்காக இப்பூமியில் கனியுள்ளதோர் வாழ்க்கை வாழவேண்டும் என்பதற்காகவே. நாம் கனிகொடுக்கவில்லையென்றால் அவர் நம்மைச் சுற்றிலும் அடைத்திருக்கின்ற தம்முடைய வேலியை எடுத்துப்போடுவார். நம்முடைய வாழ்க்கையில் தேவன் தனது பாதுகாப்பின் வேலியை எடுத்துப்போடுவாரென்றால் அது எத்தனை பயங்கரமானது, ஆபத்தானது. **அப்பொழுதோ வழிநடக்கிற யாவரும் அதைப் பறிக்கும்படியாக, அதின் அடைப்புகளை ஏன் தகர்த்துப்போட்டீர்? காட்டுப்பன்றி அதை உழுது போடுகிறது, வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்துபோடுகிறது** (சங்கீதம் 80:12,13). தேவன் நம் வாழ்வில் தன்னுடைய வேலியை எடுத்துவிட்டால், காட்டு மிருகங்கள் யாவும் நுழைந்துவிடும்; அதனால் நமது வாழ்க்கை நாசமாகிவிட வாய்ப்புகள் உண்டு. நாம் கனிகொடுக்கவேண்டும் என்றே தேவன் எதிர்பார்க்கின்றார். அதற்காகவே, நம்முடைய வாழ்க்கையில் நாம் அவருக்கேற்ற கனிகளைக் கொடுப்பதற்குத் தடையாய் காணப்பட்ட கற்களை அவர் பொறுக்கியிருக்கின்றார். நமது ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்குத் தடையாயிருக்கிற காரியங்களை அவர் எடுத்து எறிந்துவிட்டார். நாம் கனி கொடுக்கவேண்டும் என்பதற்காக தேவன் இத்தனையாய் நமக்காகச் செயலாற்றியும் நாம் அவருக்காகக் கனி கொடுக்கவில்லையென்றால், அவர் வேலியை எடுத்துவிடுவது நிச்சயம். வேலியை எடுத்துவிடுவதுடன் மாத்திரமல்லாமல், தேவனிடத்திலிருந்து நமக்கு வருகின்ற ஆசீர்வாதங்கள் நாம் கனிகொடாமலிருப்போமென்றால் நிச்சயம் தடைபடும்.

வெட்டப்படும் மரம்

இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது, ஆகையால், நல்ல கனிகொடாதமரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். மத்தேயு 3:10

தேவன் எபேசு சபையைக் குறித்து, 'உன் ஆதி அன்பு குறைந்துவிட்டது' என்று சொல்வதுடன் 'உன்னிடத்திலிருந்து விளக்குத் தண்டை எடுத்துப்போடுவேன்' என்றும் எச்சரிக்கின்றார். எபேசு சபை நன்றாக வேலை செய்கிறது; ஆனாலும் அது அன்பின் கனியை கொடுக்கத் தவறிய பட்சத்தில் தேவன் அவர்களை நோக்கி 'விளக்குத் தண்டை எடுத்துப்போடுவேன்' என்று எச்சரிக்கின்றார். தேவனுக்கேற்ற கனிகொடாத மரங்கள் நிச்சயம் வெட்டப்படும். தேவன் நமக்காக எல்லாவற்றையும் செய்கிறவராகக் காணப்பட்டாலும், நம்மிடத்திலிருந்து அவர் கனிகளை எதிர்பார்க்கின்றார். அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்: அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன், ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும், நான் இதைச் சுற்றிலுங்

கொத்தி, எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார் (லூக்கா 13:6-9). கனி கொடாத மரத்தை வெட்டிப்போடு என்று தேவன் சொல்வது ஏன்? அது நிலத்தைக் கெடுக்கின்றது. நம்முடைய வாழ்வில் கனி இல்லையென்றால், நாம் எங்கே இருக்கின்றோமோ அந்த இடத்தையும், அங்கே இருக்கும் மற்றவர்களையும் கூட நாம் கெடுத்துப்போடுகிறவர்களாகவே காணப்படுவோம். எனினும், இந்த வசனத்தில் நமக்காகப் பரிந்துபேசும் தோட்டக்காரரை நாம் காணமுடியும். அவர் எஜமானனை நோக்கி, 'இன்னும் ஒரு வருடம் இருக்கட்டும்; நான் அதற்கு உரம் போடுவேன், தண்ணீர் பாய்ச்சுவேன்' என்று கனிகொடாத மரத்திற்காக வேண்டுதல் செய்கின்றார். நாம் கனிகொடாதவர்களாகக் காணப்பட்டாலும், அழிந்துபோகாமல் நிலைத்திருப்பதின் இரகசியம் இதுவே. தேவைக்கு அதிகமாக நம்மை கவனிக்கின்றார், ஆசீர்வதிக்கின்றார், கிருபைகளைத் தருகின்றார் இத்தனையையும் தேவனிடத்திலிருந்து நாம் அனுதினமும் பெற்றுக்கொண்டிருந்தாலும், கனிகொடுக்கவில்லையென்றால் நாம் நிச்சயம் வெட்டிப்போடப்படுவோம்.

சபிக்கப்படும் மரம்

மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டுவருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ எனறு பார்க்கவந்தார். அத்திப்பழக் காலமாயிராதபடியால், அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல், வேறொன்றையும் காணவில்லை. அப்பொழுது இயேசு அதைப் பார்த்து, இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன் என்றார்: அதை அவருடைய சீஷர்கள் கேட்டார்கள். அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள், இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்திவிட்டு, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து. ஒருவனும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டுபொகவிடாமல், என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தார். அதை வேதபாரகரும் பிரதான ஆசாரியரும் கேட்டு, அவரைக் கொலைசெய்ய வகைதேடினார்கள். ஆகிலும் ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டபடியினாலே அவருக்குப் பயந்திருந்தார்கள். சாயங்காலமானபோது அவர் நகரத்திலிருந்து புறப்பட்டுப்போனார். மறு நாள் காலையிலே அவர்கள் அவ்வழியாய்ப் போகும்போது, அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போயிருக்கிறதைக் கண்டார்கள். பேதுரு நினைவுகூர்ந்து, அவரை நோக்கி: ரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான். மாற்கு 11:12-21

இயேசு பெத்தானியாவிலிருந்து வந்துகொண்டிருந்தபோது, வழியிலே ஓர் அத்திமரம் இலைகளினால் நிறைந்திருந்தது. தன்னிடத்தில் பழம் இருப்பதைப்போல அது காட்சியளித்தது. அது கனிகொடுக்கின்ற காலம் அல்லாமலிருந்தபோதிலும்கூட, தன்னிடத்தில் கனி இருப்பதைப்போல அது காட்சியளித்தது. அத்திமரம் கனிகொடுக்கின்ற நேரத்தில் அதனது இலைகள் நிறைந்து பச்சையாகக் காணப்படும். பசியாயிருந்த இயேசு கனியிருப்பதைப்போல காட்சியளித்த அந்த அத்திமரத்தினண்டையில் வந்து அதில் கனியைத் தேடுகின்றார். ஆனால், பசியாயிருந்த அவருக்கு கனி ஏதும் கிடைக்கவில்லை. உடனே இயேசு அத்திமரத்தை நோக்கி, **'இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன்'** என்று சொன்னதும் அடுத்த நாளில் அத்திமரம் காய்ந்துவிட்டது. தேவனுக்காக நாம் கனிகொடுக்கவேண்டியது அவசியம். கனி

கொடுக்கலாம், கொடாமலும் இருக்கலாம் என்று நாம் நினைத்துவிடமுடியாது. நாம் கட்டாயம் கனிகொடுக்கவேண்டும். நம்முடைய வாழ்வு தேவனுடைய பசியை ஆற்றவேண்டுமென்றால், நாம் அவருக்காக இவ்வுலகில் கனிகொடுக்கிறவர்களாக வாழவேண்டும். **எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது. சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு** (எபிரேயர் 6:7-8). தேவனிடத்திலிருந்து வரும் நன்மைகளைப் பெற்று அவருக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமே மென்மேலும் தேவனால் ஆசீர்வதிக்கப்படும். ஆனால், நாம் கனிகொடுக்கவில்லையென்றால் நாம் சபிக்கப்படுவதற்கேற்றதாய்க் காணப்படும் என்பது நிச்சயம். நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவேண்டும். நாம் சென்று கனிகொடுக்கவே தேவன் நம்மை ஏற்படுத்தியிருக்கின்றார்.

சுட்டெரிக்கப்படும் மரம்

> **நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார், கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.** ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான், அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள், அவைகள் எரிந்துபோம். யோவான் 15:1,2,6

பிதாவை நமது திராட்சைத் தோட்டக்காரராகக் கொண்டிருந்தும், இயேசு என்னும் திராட்சைச் செடியுடன் நாம் இணைக்கப்பட்டிருந்தும். நாம் கனிகொடாடத வாழ்க்கை வாழுவோமென்றால், நாமது வாழ்க்கை என்னும் மரம் ஒருநாள் சுட்டெரிக்கப்படுவது நிச்சயம். அவரில் நாம் நிலைத்திருந்தால் மாத்திரமே நம்மால் கனிகொடுக்கமுடியும். தேவனை விட்டு தூரமாய் இவ்வுலகில் வாழும் மக்களால் தேவனுக்குப் பிரியமான கனிகளை கொடுக்க முடியாதே. அப்படியிருக்க, நாம் தேவனோடு இணைந்திருக்கின்றோம், அவருடைய பிள்ளைகள் என்று சொல்லுவொமென்றால், அவரை நம்முடைய பிதா என்று அழைக்கிறவர்களாயிருப்போமென்றால் நாம் இவ்வுலகில் அவருக்காக கனிகொடுக்க வேண்டியது எத்தனை அவசியமான காரியம். நம்மிடத்தில் தேவன் எதிர்பார்க்கும் கனிகளை நாம் கொடுக்கத் தவறுவோமென்றால், நாம் சுட்டெரிக்கப்படுவது உறுதி. நம்முடைய வாழ்க்கை உலர்ந்துபோனதாய் மாறிவிடும். தேவனின் ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் தொடர்ந்து நமது வாழ்வில் நாம் பெற்றனுபவிக்க இயலாது.

நீக்கப்படும் தேவராஜ்யம்

> **ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்.** மத்தேயு 21:43

நாம் கனிகொடாத வாழ்க்கை வாழுவோமென்றால், தேவ ராஜ்யம் நம்மிடத்திலிருந்து நீக்கப்படும் அபாயம் உண்டு. சவால் நிறைந்ததோர் சத்தியம் நமக்காக வேதத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. நான் முன் கனிகொடுத்துக்கொண்டிருந்தேன், ஆனால், கனிகொடுக்கும் காலம் அல்லாததினால்

என்னிடத்தில் கனி இல்லை என்று நாம் சொல்லிவிடமுடியாது. காலத்தை நாம் சாக்குப்போக்காகக் கூறிவிடமுடியாது. அத்திமரம் இயேசுவை நோக்கி இது கனிகொடுக்கின்ற காலம் அல்லவே, பின்னே ஏன் என்னிடத்தில் கனியைத் தேடுகின்றீர் என்று கூற இயலவில்லை. தேவன் பசியாயிருக்கின்றார், கனிகொடுக்கும் காலமாக இருக்கலாம், அல்லது கனிகொடுக்கும் காலமல்லாததாயிருக்கலாம். தேவன் நம்மை நதியின் ஓரத்தில் நாட்டியிருக்கின்றார். நாம் அதின் தண்ணீரைக் குடித்து, பலனடைந்து அவருக்காகக் கனிகொடுக்கவேண்டும்.

தேவன் நம்மை தமது ஜனங்களாக முன்குறித்து இவ்வுலகில் பாதுகாத்து, பராமரித்து வருவதன் உன்னத நோக்கம், நாம் அவருக்காகக் கனிகொடுக்கவேண்டும் என்பதற்காகவே. தேவனிடத்திலிருந்து அளவில்லாத நன்மைகளையும், பரலோகத்தின் ஆசீர்வாதங்களையும் பெற்றநுபவித்துக்கொண்டிருக்கும் நாம் கனிகொடுக்கத் தவறிவிடக்கூடாது. நாம் அவ்வாறு தவறுவோமென்றால், நம்மைச் சுற்றி இருக்கின்ற தேவப் பாதுகாப்பு நிக்கப்படும். நம்முடைய வாழ்க்கை தேவ பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்படும். காய்ந்துபோன அத்திமரத்தைப்போல நமது வாழ்க்கையும் மாறிவிடும். எனவே தேவனது சந்ததியாராக இவ்வுலகில் சாட்சிகளாய் வாழும் நாம் நமது கனிகளினால் தேவனது மனதை மகிழப்பண்ணுவோம்; இவ்வுலகத்தின் திரளான ஆத்துமாக்களை தேவனுக்கென்றும், தேவராஜ்யத்திற்கென்றும் ஆதாயப்படுத்துவோம்.